தேதி: 16.02.2023

வாக்குமூலம்

குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண். 2, திருவைகுண்டம்

வழக்கு எண். CC.589/2022

வழக்கு சாட்சி எண். PW 1

| | |
|---|---|
| பெயர்: மங்கையர்க்கரசி | ஜாதி : |
| தந்தை பெயர் : | தொழில்: |
| கிராமம்: | சமயம்: |
| தாலுகா: | வயது: |

( எதிரிகள் 1,2 ஆஜர் இல்லை. எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு -317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )

முதல் விசாரணை :

(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

1. நான் தற்போது மாவடிப்பண்ணையில் குடியிருந்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும் . எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை . அவருடைய வருகையின்மையால் அடையாளம் குறித்து ஆட்சேபனை செய்யமாட்டேன் என்று மனு வாயிலாக தெரிவிக்கப்பட்டது போலீசார் என்னை விசாரித்தார்கள் . எதிரிகள் ஒரே ஊரைச்சேர்ந்தவர்கள் . எதிரிகளுக்கும் எங்களுக்கும் வீடு சம்மந்தமாக பிரச்சனை இருந்து வந்தது.

2. கடந்த 18.09.2021ம் தேதி மாலை 4.30 மணி அளவில் எங்கள் வீட்டின் பின்புறம் மாட்டிற்கு வைக்கோல் வைப்பதற்கு சென்ற போது அப்போது அங்கு ராஜேஷ், சுபாஷ், சுப்பிரமணியன், ராகவன் ஆகியோர் வந்து என் தலைமுடியை சுபாஷ் என்பவர் பிடித்து இழுத்து கீழே தள்ளினார் .

3. பின்பு ராகவன் என்னை பனை மட்டையால் இரண்டு தோள்பட்டை மற்றும் நெஞ்சில் அடித்தார் . ராஜேஷ் என்பவர் என்னை நெஞ்சிலும் ,

காலிலும் மிதித்தார். சுப்பிரமணியன் என்பவர் என்னை கையால் பிராண்டி அடித்தார். நான் வலியால் சத்தம் போட்டவுடன் எனது கணவர் மற்றும் எனது பிள்ளைகள் கார்த்திகா , முத்துச்செல்வி மற்றும் துரை முருகன் ஆகியோர் வந்து சத்தம் போட்டார்கள்.

4. பிறகு எதிரிகள் என்னை தேவடியா செறுக்கி , கண்டார ஓலி என்று அசிங்கமாக பேசி வீட்டை காலி செய்யவில்லை என்றால் வைக்கப்போராடு சேர்த்து உன்னையும் கொளுத்திவிடுவோம் என்று மிரட்டினார்கள்.

5. பிறகு எதிரிகள் எங்கள் வீட்டு ஓடு , பிளாஸ்டிக் சேர், தகரச்சீட்டு, பூந்தொட்டி ஆகியவற்றை உடைத்து சேதப்படுத்திவிட்டு சென்று விட்டார்கள். காயம்பட்ட நான் திருவைகுண்டம் அரசு மருத்துவமனைக்கு உள்நோயாளியாக சேர்ந்தேன். அங்கு 3 நாட்கள் சிகிச்சையில் இருந்தேன்.

6. உடைந்த பொருளின் மதிப்பு ரூ. 2500 இருக்கும். எதிரிகள் என்னை அடித்ததால் எனக்கு நெஞ்சு , காது, தோள்பட்டை ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டது.

7. நான் மருத்துவமனையில் இருந்த போது காவலர்கள் என்னை விசாரித்தார்கள். அவர்கள் புகார் வாக்குமூலமாக பதிவு செய்தார்கள். புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும் . புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1** ஆகும். சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

8. எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை . அவருடைய வருகையின்மையால் அடையாளம் குறித்து ஆட்சேபனை செய்யமாட்டேன் என்று மனு வாயிலாக தெரிவிக்கப்பட்டது போலீசார் என்னை விசாரித்தார்கள்.

வழக்கறிஞர் ஆஜர் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவித்தார்

சாட்சி சொல்லியதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் வாசித்து காண்பிக்கப்பட்டு அவர் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின் கையொப்பம் பெறப்பட்டது.

ஒப்பம் /–
திரு. தே.மயில்சாமி.,
நீதித்துறை நடுவர் எண்.2,
திருவைகுண்டம்.

தேதி: 16.02.2023

வாக்குமூலம்

குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண். 2, திருவைகுண்டம்

வழக்கு எண். CC.589/2022

வழக்கு சாட்சி எண். PW 2

| | |
|---|---|
| பெயர்:குணசேகரன் | ஜாதி : |
| தந்தை பெயர் : | தொழில்: |
| கிராமம்: | சமயம்: |
| தாலுகா: | வயது: |

( எதிரிகள் 1,2 ஆஜர் இல்லை. எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு -317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )

முதல் விசாரணை :

(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

1. நான் தற்போது மாவடிப்பண்ணையில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது மனைவி ஆவார். எதிரிகளை எனக்கு தெரியும். எதிரிகள் ஒரே ஊரைச்சேர்ந்தவர்கள் . எதிரிகளுக்கும் எங்களுக்கும் சொத்து சம்மந்தமாக முன்விரோதம் இருந்து வந்தது.

2. கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு மாலை 4.30 மணி அளவில் எங்கள் வீட்டின் பின்புறம் அ.சா.1 மாட்டிற்கு வைக்கோல் வைத்துக்கொண்டு இருந்தார். அப்போது அங்கு ராஜேஷ் , சுபாஷ், சுப்பிரமணியன், ராகவன் ஆகியோர் வந்து எனது மனைவியை அடித்தார்கள் .எனது மனைவியின் அலறல் சத்தம் கேட்டு நான் மற்றும் எனது பிள்ளைகளும் வந்தோம்.

3. எதிரிகள் அ.சா.1 யை பனை மட்டையால் அடித்துக்கொண்டு இருந்தார்கள். நானும் எனது பிள்ளைகளும் போய்விலக்கிவிட்டோம்.

4. பிறகு எதிரிகள் எனது மனைவியை தேவடியா செறுக்கி, கண்டார ஓலி என்று அசிங்கமாக பேசிவிட்டு எங்களை வீட்டை காலி செய்யவில்லை

என்றால் வைக்கப்போராடு சேர்த்து உன்னையும் கொளுத்திவிடுவோம் என்று மிரட்டினார்கள்.

5. பிறகு எதிரிகள் எங்கள் வீட்டு ஓடு , பிளாஸ்டிக் சேர் , தகரச்சீட்டு, பூந்தொட்டி ஆகியவற்றை உடைத்து சேதப்படுத்திவிட்டு சென்று விட்டார்கள். காயம்பட்ட அ.சா.1 யை நான் திருவைகுண்டம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன் . அங்கு ஒரு வாரம் சிகிச்சையில் இருந்தார்.

6. உடைந்த பொருளின் மதிப்பு ரூ . 2500 இருக்கும். இது சம்மந்தமாக அ.சா.1 காவல்துறையினரிடம் புகார் அளித்தார் , அவர்கள் புகார் வாக்குமூலமாக பதிவு செய்தார்கள் . புகார் வாக்குமூலத்தில் உள்ள அறிவேன் சாட்சி கையெழுத்து என்னுடையது தான் அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும் . அறிவேன் சாட்சி கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.2** ஆகும். சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

8. எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை . அவருடைய வருகையின்மையால் அடையாளம் குறித்து ஆட்சேபனை செய்யமாட்டேன் என்று மனு வாயிலாக தெரிவிக்கப்பட்டது போலீசார் என்னை விசாரித்தார்கள்.

வழக்கறிஞர் ஆஜர் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவித்தார்

சாட்சி சொல்லியதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் வாசித்து காண்பிக்கப்பட்டு அவர் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின் கையொப்பம் பெறப்பட்டது.

ஒப்பம் /–
திரு. தே.மயில்சாமி.,
நீதித்துறை நடுவர் எண்.2,
திருவைகுண்டம்.

தேதி: 16.02.2023

வாக்குமூலம்

குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண். 2, திருவைகுண்டம்

வழக்கு எண். CC.589/2022

வழக்கு சாட்சி எண். PW 3

| | |
|---|---|
| பெயர்: கார்த்திகா | ஜாதி : |
| தந்தை பெயர் : | தொழில்: |
| கிராமம்: | சமயம்: |
| தாலுகா: | வயது: |

( எதிரிகள் 1,2 ஆஜர் இல்லை. எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு -317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )

முதல் விசாரணை :

(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

1. நான் தற்போது மாவடிப்பண்ணையில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 மற்றும் அ .சா.2 எனது பெற்றோர் ஆவார்கள் . எதிரிகளை எனக்கு தெரியும் . எதிரிகள் எனது பக்கத்து வீட்டைச் சேர்ந்தவர்கள். எதிரிகளுக்கும் எங்களுக்கும் வீடு ச சம்மந்தமாக முன்விரோதம் இருந்து வந்தது.

2. கடந்த 18.09.2021 ம் தேதி மாலை 4.30 மணி அளவில் எங்கள் வீட்டின் பின்புறம் அ .சா.1 மாட்டிற்கு வைக்கோல் வைத்துக்கொண்டு இருந்தார். அப்போது அங்கு ராஜேஷ் , சுபாஷ், சுப்பிரமணியன், ராகவன் ஆகியோர் வந்து எனது அம்மாவை அடித்தார்கள் . எனது அம்மாவின் அலறல் சத்தம் கேட்டு நானும் , அ.சா2 ம் மற்றும் எனது தங்கை முத்துச்செல்வி வந்தோம்.

3. எதிரிகள் அ.சா.1யை பனை மட்டையால் அடித்துக்கொண்டு இருந்தார்கள். நானும் எனது அப்பாவும் , எனது சகோதிரியும் , போய்விலக்கிவிட்டோம்.

4. பிறகு எதிரிகள் எனது அம்மாவை தேவடியா செறுக்கி , கண்டார ஓலி என்று அசிங்கமாக பேசிவிட்டு எங்களை வீட்டை காலி செய்யவில்லை என்றால் வைக்கப்போராடு சேர்த்து உன்னையும் கொளுத்திவிடுவோம் என்று எனது அம்மாவை மிரட்டினார்கள்.

5. பிறகு எதிரிகள் எங்கள் வீட்டு ஓடு , பிளாஸ்டிக் சேர் , தகரச்சீட்டு, பூந்தொட்டி ஆகியவற்றை உடைத்து சேதப்படுத்திவிட்டு சென்று விட்டார்கள். காயம்பட்ட எனது அம்மாவை எனது அப்பா திருவைகுண்டம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன் . அங்கு 3 நாட்கள் சிகிச்சையில் இருந்தார். சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

6. எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை . அவருடைய வருகையின்மையால் அடையாளம் குறித்து ஆட்சேபனை செய்யமாட்டேன் என்று மனு வாயிலாக தெரிவிக்கப்பட்டது போலீசார் என்னை விசாரித்தார்கள்.

வழக்கறிஞர் ஆஜர் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவித்தார்

சாட்சி சொல்லியதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் வாசித்து காண்பிக்கப்பட்டு அவர் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின் கையொப்பம் பெறப்பட்டது.

ஒப்பம் /–
திரு. தே.மயில்சாமி.,
நீதித்துறை நடுவர் எண்.2,
திருவைகுண்டம்.